R 5844 (page 38)

# எலியா மற்றும் எலிசாவின் நிழலான அனுபவங்கள்

## TYPICAL EXPERIENCES OF ELIJAH AND ELISHA

(சகோ.ரஸ்ஸல் அவர்களின் சொற்பொழிவுகளின் குறிப்புகளை அறிக்கையிடும் ஒரு சுருக்கெழுத்தாளர்)

நாங்கள் அருமையான சகோதரர்களை விட்டுப்பிரிந்து வேறு பட்டணத்துக்கு போகுமுன், உங்களில் சிலர் என்னிடத்தில் கேட்க விரும்பினீர்கள்:

சகோ.ரஸ்ஸல் அவர்களே, நாங்கள் சில காலத்திற்கு உங்களை மீண்டும் காண முடியாமற்போகலாம். ஆகவே இனிவருங்காலத்தில் சபையின் நம்பிக்கைகளைப்பற்றி சில விஷயங்களை அறிய ஆவலாயிருக்கிறோம். சபை கூடிய விரைவில் மறுரூபமாகிவிடும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

எங்களுக்கு தெரியாது என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அநேக காரியங்களை நாங்கள் அறியோம் என்று நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். வெளிப்படுத்தின விசேஷத்தைக் குறித்த புத்தகத்தின் முழுமையான அறிவை நாங்கள் அறிந்திருந்தோமானால் 7ம் தொகுதியை விரைவில் வெளியிடுவோம். சில காரியங்களுக்கு எங்களால் நிச்சயமான செய்திகளை வெளிப்படுத்த முடியவில்லை. அனுமானமாக எந்தக் காரியத்தையும் செய்ய நாங்கள் விரும்பவில்லை.
"ஓருவன் போதித்தால் வேத வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்" - 1பேதுரு4:11

சகோ.ரஸ்ஸல் அவர்களே, நாம் மறுரூபமாகும் காலத்தைக் குறித்த உங்களது சிந்தனை என்ன? நாம் எதிர்பார்த்திருந்த காலத்தில் அது வரவில்லை என்பதால் ஏமாற்றமடையவில்லையா?

R5845 : page 38

இல்லை. நாங்கள் ஏமாற்றமடையவில்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். நாம் காவல்கோபுரம் பத்திரிக்கையில் வெளிப்படுத்தின அந்தக் காலத்துக்கு இரண்டு வருடம் முன்பே, நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். அதன்படி, அக்டோபர் 1914வரை அந்த மாறுதல் நிகழாது என்று நாங்கள் எண்ணுகிறோம். ஆனால் சகோதரரே, தேவனிடத்தில் சரியான நோக்கம் கொண்டிருப்பவர்கள், அவரது எந்த ஏற்பாடுகளிலும் ஏமாற்றமடைவதில்லை. நமது சுயசித்தம் நிறைவேறவேண்டும் என நாம் விரும்புவதில்லை. ஆகவே அக்டோபர் 1914இல் நாங்கள் தவறாக எதிர்னோக்கியிருந்த காரியம், நிறைவேறும்படி கர்த்தர் தம்மை மாற்றிக்கொள்ளவில்லை என்று நாங்கள் அறிந்து மகிழ்கிறோம். அவ்வாறு நடக்க நாங்கள் விரும்பினதில்லை. அவரது திட்டங்களும் அவரது நோக்கங்களும் நிறைவேற தேவையான புரிந்துகொள்ளும் அறிவை தாரும் என்றுதான் நாங்கள் ஆசிக்கிறோம்.

தற்போது எந்தக் காரியங்கள் நடைபெறும் என்று எண்ணுகிறீர்கள்? தற்கால அறிகுறிகள் என்ன என்று நீங்கள் எண்ணுகிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

இக்கேள்விகளுக்கு நாங்கள் ஏற்கனவே காவற்கோபுரம் பத்திரிக்கையில் நண்பர்களுக்கு பதிலளித்திருக்கிறோம். எலியா மற்றும் எலிசாவின் நிழல்களில், தீர்க்கதரிசியாகிய எலியாவின் பூமிக்குரிய வாழ்க்கையின் முடிவைக் குறித்து நமது கருத்துக்களை கூறியுள்ளோம். இங்கு மீண்டுமாக அதனை சுருக்கமாகவும் ஓரிரு வார்த்தைகளை சேர்த்தும் குறிப்பிடுகிறோம். தேவ சபையானது எலியாவுக்கு நிஜமாக உள்ளது. ஏனெனில் அவள் தன் மாபெரும் தலையாகிய

தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவோடு இருக்கிறாள். தீர்க்கதரிசி எலியாவுக்கு நிஜமாக மாம்சத்திலுள்ள கிறிஸ்து (சபை) இருக்கிறாள். தேவனது தீர்க்கதரிசியாக நிழலாக செய்த அவரது பணி, கிறிஸ்துவின் சபையின் அனுபவங்களாக பூமியில் கடந்த 1800 வருடகாலங்களாக இருந்துவருகிறது. எலியாவின் ஜீவியமுடிவின் அனுபவங்கள், வேதாகமம் போதிக்கிறபடி, மாம்சத்திலுள்ள கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசிக்கால அங்கங்களின் இறுதி அனுபவங்களுக்கு இணை சம்பவங்களாக இருக்கிறதை நாம் புரிந்துகொண்டிருக்கிறோம்.

## கடைசிக்காலக்கணக்கின் எல்லையை கடப்பது ஒரு பரீட்சை

கர்த்தர் எலியாவை வானங்களுக்குள் எடுத்துக்கொண்டபொழுது, சில குறிப்பிட்ட காரியங்களை கடந்துபோகும்படி செய்தார். அந்த காரியகள் கிறிஸ்துவின் கடைசி அங்கங்கள் எடுத்துக் கொள்ளப்படுவதற்கான இணை சம்பவங்களாக உள்ளது. இது ஒரு காரண காரியத்தோடு கூடிய அனுமானமாக உள்ளது. கர்த்தர் எவ்வாறு அந்த நாளில் எலியாவை அப்பால்கொண்டுபோனார் என்று நாம் பார்த்திருக்கிறோம். கிலேயாத், பெத்தேல், எரிக்கோ, யோர்தான் ஆகிய நான்கு அடுத்தடுத்த இடங்களுக்கு அனுப்பினார் என்று நாம் பார்த்திருக்கிறோம். இந்த வெவ்வேறான இடங்களுக்கு எலியா அனுப்பப்படும்போது, கர்த்தர் தன்னை எடுத்துக்கொண்டுபோகிறார் என்றே எண்ணினார். அவ்வாறே இன்று நம்மிடையேயும் நடந்துவருகிறது. கர்த்தர் இந்த யுகத்தின் அறுவடையின்போது, தமது வசனத்தின் மூலமாக தம் பிள்ளைகளை நான்கு வெவ்வேறு காலகட்டங்களுக்கு அனுப்புவதாக தோற்றமளிக்கிறது. அவை 1874, 1878, 1881, 1914 ஆகிய வருடங்களாகும். இந்த ஒவ்வொரு காலகட்டத்தின்போதும், விழித்திருக்கின்ற பரிசுத்தவான்கள், இந்த யுகமுடிவு திருச்சபைமேல் உள்ளது என்று உணர்ந்துகொண்டு, “மாறுதல் வரக்கூடும்” என்று எண்ணிக்கொண்டார்கள்.

அதற்காக விழித்திருந்தார்கள். இந்த ஒவ்வொரு காலகட்டத்திற்கும் வந்தபொழுது, கர்த்தர் கூறினான், “வேறொரு இடத்துக்கு செல்லுங்கள்” என்றார். இறுதியாக, அக்டோபர் 1ம்தேதி 1914ம் வருடம் கடைசி இடத்துக்கு நாம் சென்றடைந்தோம். வேதாகமக் காலக்கணக்கு சுட்டிக்காட்டுகிறபடி, சபையின் அனுபவங்களில் இது இறுதிக்கட்டம் ஆகும். நாம் அவ்விடத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவோம் என்று கர்த்தர் நம்மிடத்தில் கூறினாரா? இல்லை. பின் அவர் என்ன கூறினார்? இந்தத்தேதி, புறஜாதியாரின் காலம் முடிவடைவதை சுட்டிக் காண்பிப்பதை, அவரது வார்த்தையும் தீர்க்கதரிசன நிறைவேறுதலும் அப்பழுக்கின்றி குறிப்பிடுகிறது. “சபை மாறுதல் அடைவது” அந்த தேதிக்கு முன்போ அல்லது பிற்பாடோ நடைபெறும் என்று நாம் இதிலிருந்து அனுமானிக்கிறோம். ஆனால் அவ்விதமாகவே இருக்கும் என்று தேவன் நம்மிடத்தில் கூறவில்லை. அந்த அனுமானப்படி நடக்க அவர் அனுமதித்திருக்கிறார். எங்குமிருக்கிற தேவனுடைய அருமையான பரிசுத்தவான்களுக்கு இந்த பரீட்சை அவசியமானது என்று நிரூபிக்கப்பட்டிருப்பதை நாம் நம்புகிறோம்.

## தண்ணீரை அடித்தல் எதைக் குறிக்கிறது?

புறஜாதியாரின் காலம் 1914ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1ம் தேதி முடிவடைந்ததா?

அசைக்கும் பயங்கரமான பணி அப்பொழுது துவங்கினவுடன் உலகின் வல்லரசுகள் சிறுசிறு துண்டுகளாக உடையத்துவங்கின. அசைத்தல் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. முற்றிலுமாக அழிக்கப்படுவரை நாளுக்கு நாள், வாரத்துக்கு வாரம் தொடர்ந்து நீடிக்கும். நமது பூமிக்குரிய ஜீவியத்தை நாம் எப்பொழுது முடிப்போம்? நிச்சயமான ஏதாவது ஒன்றை காணமுடியும்வரை எதுவும் தீர்மானமாகக் கூறமுடியாது. யாராகிலும் தீர்மானமாக எதையாவது கண்டுபிடித்தால் எங்களுக்கு தெரியப்படுத்த விரும்புகிறோம்.

நாம் எதை எதிர்பார்க்கிறோம்? எலியா எலிசா சித்திர விளக்கத்தில் கூறப்பட்டுள்ளதையே நாம் எதிர்பார்க்கிறோம். எலியாவும் எலிசாவும் யோர்தான் நதியண்டை வந்தபோது, என்ன நடந்தது

என்பதை நாம் யோசித்துப் பார்ப்போம். அவர்கள் அங்கே வந்தபொழுது, நின்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள். அவர்கள் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்குமுன் ஏதாகிலும் செய்தாகவேண்டும். அவ்வாறே கர்த்தருடைய ஜனங்கள் ஒருசில நேரம் 1914 அக்டோபரில் நின்றுகொண்டிருக்கிறார்கள். பின்பு எலியா தன் கைச் சால்வையை எடுத்து, அதை முறுக்கி, யோர்தானின் நீரை அடித்தான். நீர் வலதுபுறமாயும் இடப்புறமாயும் பிரிந்தது, நீர் வற்றின நிலத்தில் தீர்க்கதரிசிகள் நடந்துசென்றனர். அவர்கள் நதியைக் கடந்தபிறகு பேசிக்கொண்டே நடந்துசென்றனர். கர்த்தரிடத்ததிலிருந்து அவர்கள் தொடர்ந்து அறிவுரைகளை பெறாத நிலையில், தொடர்ந்து நடந்து சென்று கொண்டிருக்கும் வேளையில், திடீரென்று அக்கினி ரதம் தோன்றி இருவரையும் பிரித்தது, எலியா புயல்காற்றின் ரதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டார்.

## அக்கினி இரதம் பிரித்தது

இவ்வாறு பிரித்தது நிஜத்தில் எதை முக்கியப்படுத்துகிறது?

சிறுமந்தைக்கும் திரள்கூட்டத்துக்குமிடையே ஏற்படும் பிரிவினையை இது குறிக்கிறதாக நாம் கருதுகிறோம். என்றாலும், யார் திரள் கூட்டத்தார் என்று நியாயந்தீர்க்காதபடி நாம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். அந்த ஒரு சகோதரனை குறித்து என்ன நினைக்கிறீர்கள்? என்று சிலர் நம்மைப்பார்த்து கேட்பார்கள். நாம் ஒருவரையொருவர் நிதானிக்ககூடாது. அப்படிப்பட்ட ஒருவர் திரள் கூட்டத்து வகுப்பரைச் சேர்ந்தவர் என்று நாம் கூறக்கூடாது. எல்லா நண்பர்களையும் ஒரே ஜனங்களாக நாம் கருதவேண்டும். யார் அவருக்கு முழுமையுமாக உண்மையும் உத்தமமுமானவர்கள் என்று கர்த்தர் மட்டுமே அறிவார். சிறுமந்தை வகுப்பார் தங்களுடைய பூமிக்குரிய ஓட்டத்தை ஓடிமுடித்தபிறகு, அவர்களை வெளியரங்கமாக்குவார். கர்த்தர் தாமே பிரிவினையை செய்கிறார்.

## எச்சரிக்கையின் வார்த்தை -

இந்த விஷயத்தில் எப்படிப்பட்ட பெருந்தவறு உருவாகிறது என்பதை சிறு விளக்கம் மூலம் இங்கு நாம் தருகிறோம். வெளிநாட்டிலிருந்து வந்திருந்த சகோதரருடன் நாங்கள் காரில் அருகாமையில் வசித்துவந்த, எளிமையான உடையில் இருந்த மற்றொரு சகோதரருடன் சென்றோம். சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டிருந்த சகோதரன், அந்த எளிய சகோதரனை சுட்டிக்காட்டி, “அந்த சகோதரன், சத்தியத்தில் மிகுந்த ஆர்வமுடையவராக எனக்குத் தோன்றவில்லை” என்றார். அதாவது, அந்த சகோதரன் திரள்கூட்டத்து வகுப்பாரைச் சேர்ந்தவராக தாம் எண்ணுவதாக சுட்டிக் காண்பித்தார். ஏன் அவ்வாறு எண்ணினீர்கள்?” என்று நாங்கள் அவரிடம் வினவினோம். அதற்கு பதிலுரையாக, “நான் அறியேன், ஆனால் அவரை பார்க்கும்பொழுது, அவர் ஊழியத்தில் மிகுந்த அக்கறையோடு செயல்படுவராக தோன்றவில்லை. அவர் சபை ஐக்கியங்களிலும் கலந்துகொள்ளாதவராக இருக்கலாம்” என்றார். இப்பொழுது, குற்றஞ்சாட்டப்பட்ட அந்த நபரைப் பற்றிய உண்மைகளை நாங்கள் கூறுகிறோம். யாத்திரை மேற்கொண்ட சகோதரரால், திரள்கூட்டத்து வகுப்பை சேர்ந்தவராக இருக்கலாம் என்று எண்ணப்பட்ட சகோதரன் கர்த்தருடைய ஊழியத்துக்காக 20,000 டாலர்கள் கொடுத்திருக்கிறார். மேலும் கிறிஸ்துவின் நிமித்தம் பலியின் வாழ்க்கை வாழும்பொருட்டு, தாழ்ந்த சூழ் நிலையில் வாழ்ந்துவரும் அவர், மிக எளிமையான ஆடைகளையே அணிவார். யாத்திரை வந்த சகோதரரோ

**R5845 : page 39**

இவைகளைப்பற்றி ஒன்றும் அறியாதவராயும், அவரது ஏழ்மையான தோற்றத்தைக் குறித்த ஆர்வமற்றவராயும் இருந்தார். இப்படியாக நம்மிடையே ஒருவருக்கொருவர் வஞ்சிக்கப்படுவது நடைபெறுகிறது. “கர்த்தர் தம்முடையவரை அறிவார்”

கர்த்தருக்கு சிறுமந்தை வகுப்பாரை பிரிக்கும் நேரம் வரும்வேளையில், அவர் எந்த தவறும் செய்யமாட்டார். சிறுமந்தை வகுப்பார் இரதத்தில் செல்வர், மற்றவர் எவரும் செல்லமுடியாது.

ஆகவே தேவ அன்பில் நம்மை காத்துக்கொள்வோம். பிறர் என்ன யோசிப்பார்கள் என்று எண்ணாதிருங்கள். சகோதரருக்கு நாம் ஊழியம் செய்யவும், நேசிக்கவும் வேண்டும், உண்மைதான். ஆனால் நம்மால் இயன்றளவு சிறப்பாக செய்யும்போது அதை சில சகோதரர்கள் தவறாக புரிந்துகொள்ளக்கூடும். ஆகவே கர்த்தருடைய கரங்களில் நம்மிடமுள்ள அனைத்தையும் ஒப்புவிப்போம். முழு காரியங்களையும் அவரே பொறுப்பேற்றுக்கொள்வார். தன் இருதயம் கர்த்தரிடத்திலும் சகோதரரிடத்திலும் நேரான நோக்கங்கொண்டிருக்கிறதா என்று அவனவன் தன்னையே கவனித்திருக்கக்கடவன். மற்ற எவரைக் குறித்தும் தீர்மானிக்கவேண்டாம் என்று பவுல் கூறகிறர்.

“காலத்துக்குமுன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்” - 1கொரிந்தியர் 4:5

அனைத்தும் வெகுவிரைவில் வெளியரங்கமாக்கப்படும். எலியா வகுப்பார் இரதத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதை நாம் காணப்போகிறோம். மற்றவர்களோ எடுத்துக்கொள்ளப்படாமல் கைவிடப்படுவர். அதன்பிறகு பிரிவினை தீவிரத்துடன் நடைபெறுவதை நாம் காண்போம். அவ்வேளையில் நாம் அனைத்தையும் அறிந்துகொள்வோம். கர்த்தரே அதை கவனித்துக்கொள்வார்.

## இரதம், அக்கினி, சுழற்காற்று-:

இப்பொழுது அக்கினி சுழற்காற்று இவற்றின் பொருளை பார்ப்போம். அக்கினி அழிவையே எப்பொழுதும் அடையாளப்படுத்துகிறது. அக்கினி இரதம் என்பது எலியா மற்றும் எலிசா வகுப்பார் பிரிக்கப்படும் சில பலமான அனுபவங்களையும், எலியா வகுப்பார் அடையும் மீட்பையும் முக்கியப்படுத்துகிறது.

“சகோதரர் ரஸ்ஸல் அவர்களே, எங்களை எச்சரிக்கும்போது நீங்கள் பயப்படுவதில்லையா? என்று நீங்கள் கேட்கலாம்.

இல்லை. நாங்கள் அனைவரும் கர்த்தருடைய இரதத்தினை அடைய மிகவும் வாஞ்சையாயிருக்கிறோம். அகில உலகத்திலும் இது மிகச் சிறந்த ஒன்று. ஆனால் அதிக உபத்திரவம் சந்திக்கநேரிடும் என்பது இதன் பொருளா? ஆம். இத்துன்பம் எங்களது இரதமாக இருந்து, எங்களது குடியிருப்புக்கு எடுத்துச்செல்லுமானால், அத்துன்பத்தை நாங்கள் நேசிக்கிறோம். நாள்தோறும் அதற்காக காத்திருக்கிறோம். எலியாவின் இரதம் வந்தபொழுது, சுழற்காற்று அவரை பூமிக்குரிய பார்வைக்கப்பால் பரலோகத்துக்கு, அதாவது வளிமண்டலத்துக்கு தூக்கிச்சென்றது. சபையைப் பொருத்தமட்டில் சுழற்காற்று எதை முக்கியப்படுத்துகிறது? அதிக உபத்திரவத்தை அடையாளப்படுத்துகிறதா என்று நீங்கள் கேட்கலாம். நாங்களும் அவ்வாறே எண்ணுகிறோம். அன்பு நண்பர்களே, நாமும் அந்த இரதத்துக்காகவும், சுழற்காற்றுக்காகவுமே காத்திருக்கிறோம். அது என்னவாக இருக்கும்? மாபெரும் குழப்பத்தின் காலத்தையே வரவிருக்கிற மாபெரும் சுழற்காற்றாக கர்த்தர் விவரிக்கிறார்.

“இதோ, ஜாதி ஜாதிக்குத் தீமை பரம்பும், பூமியின் எல்லைகளிலிருந்து மகா பூசல் எழும்பும். அக்காலத்திலே பூமியின் ஒருமுனை துவக்கிப் பூமியின் மறுமுனைமட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள். அவர்கள் புலம்பப்படாமலும், சேர்க்கப்படாமலும், அடக்கம் பண்ணப்படாமலும் பூமியின் மேல் எருவாவார்கள்” - எரேமியா 25:30-33, 30:23,24.

மாபெரும் சுழற்காற்றாகிய அராஜகத்தால் எலியா வகுப்பாரே அவர்களுக்குள் முதலவதாக பாதிப்புக்குள்ளாவார்கள் என்பது நமது கருத்தாக உள்ளது. கர்த்தருடைய ஜனங்களில் பெரும்பாலானோர் அந்த நேரத்தில் விசுவாசமாயிருப்போர் அனைவரும் தற்கால ஜீவிய நிலைமையிலிருந்து சில குழப்பமான நிலைமைக்குள் கடந்துபோவார்கள். இக்காரியங்களை எல்லா ஜனங்களுக்கும் நாம் பொருத்திப் பார்ப்பதில்லை. ஏனெனில் மற்ற ஜனங்கள் இவற்றில் ஆர்வங்கொள்வதில்லை.

“பன்றிமுன் உன் முத்துக்களை எறியாதே” என்று நம் குருவும் கூறியுள்ளர். இங்கு கூடியுள்ல நாம் அனைவரும் ஆழ்ந்த ஆர்வமுடையவர்களாக இருப்பதாலும், இரதம் மற்றும் சுழற்காற்றின் அனுபவங்களில் பங்குபெற எதிர்நோக்கியிருப்பதாலும் நாம் இங்கு பேசுகிறோம். அராஜகத்தால் உண்டாகும் கலகத்தின்போது நமது இறுதி அனுபவங்கள் நடைபெறும் என்று நாம் எண்ணுகிறோம். சில சமயங்களில் எப்படி திருச்சபையின் எல்லா அங்கங்களும் எடுக்கப்படமுடியும் என்று ஆச்சரியப்படுகிறோம். எல்லாருக்கும் நடைமுறையில் நடப்பதுபோன்று, மரணம் சம்பவித்து “மாறுதல்” உண்டாகுமானால், உலகெங்கிலும் உள்ள பிரதிஷ்டைசெய்த ஜனங்கள் திடீரென்று மரிப்பது அற்புதமான ஒன்றாக இருக்கும். அல்லது எல்லோரும் முதிர்வயதுசென்று மரிக்கமுடியும். இதன் பொருள் என்னவெனில், சிலர் இன்னும் அநேக ஆண்டுகள் நல்ல முறையில் ஜீவிக்கலாம் என்பதேயாகும்.

**R5846 : page 39**

## மூன்று முக்கியக் கருத்துக்கள்-:

கர்த்தர் அந்தக் காரியத்தை இவ்விதமாக சித்தரிக்கிறார். முதலாவதாக அக்கினி இரதம் உண்டாகும். இது என்னவென்று நாம் அறியோம். ஆனாலும் இது கர்த்தருடைய பிள்ளைகளில் இரண்டு வகுப்பாரை பிரிப்பதற்கான சில கடினமான அனுபவங்கள் என்று நாம் புரிந்திருக்கிறோம். அதன்பிறகு சுழற்காற்றாகிய அராஜகம் வளர்ந்துபெருகும். ஒருவேளை விசுவாசிகளின் ஜீவியத்தை மக்கள்கும்பல் அழிக்கலாம், நாம் அறியோம். அந்த அக்கினி இரதம் என்னவென்று தற்போது நம்மால் கற்பனைசெய்ய முடியவில்லை. முட்டாள்தனமாக ஏதாவதொன்றை நிதானிக்க நாம் விரும்புவதில்லை. நாம் நிழலாக அல்லது சித்திரவிளக்கமாக சொல்லப்பட்டதை மட்டுமே கற்க ஆர்வமாயிருக்கிறோம். நாம் ஒரு குறிக்கோளை செயல்படுத்தும் நோக்கத்தோடு சிந்தித்து யாதொரு துன்பத்துக்குள் அகப்பட்டுக்கொள்ளக் கூடாது. அவ்வாறுசெய்வது, சாத்தான் யேசுவுக்கு ஆலோசனை கூறினதுபோல இருக்கும்.

“தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி, நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்” என்றான்.

நாம் விவேகிகளாகவும், சாந்தமுள்ளோராயும், இரக்கமுடையோராயும், தயாளகுணமுடையோராயும், நாம் அறிந்திருக்கிறபடி கர்த்தருக்கு உண்மை உள்ளவர்களாயும் இருப்போமானால், பரிபூரண அமைதலும், இளைப்பாறுதலையும் நம் சிந்தையில் அடைந்திருப்போம். நமக்கென்று கர்த்தருடைய வேளை வரும்பொழுது அனைத்தும் சரிசெய்யப்பட்டிருக்கும். தன் பிள்ளைகளுக்கு அவர் ஏற்பாடு செய்திருப்பவைகள் மிகச் சிறந்ததாகவே இருக்கும். அவற்றை நாம் பெரும்பொழுது மகிழ்ச்சியடைவோம்.

“அக்கினி இரதம் எந்த நொடிப்பொழுதில் வரும் என்று நீங்கள் எதிர்ப் பார்த்திருக்கிறீகளா? அல்லது சிலகாலம், சில மாதங்கள், ஒருவேளை ஒருவருடம் அல்லது இன்னும் அதிகமாக தாமதமாகும் என்று எண்ணுகிறீர்களா? என்று கேட்கலாம். குறைந்தது 1வருடகாலம் அல்லது ஒருவேளை அதிகமாகலாம் என்பது என்னுடைய கருத்து. ஏதாவதொன்று வேறுவகையில் முதலாவதாக நேரிடலாம். அது என்னவென்று நம்மால் தெளிவாக இன்னும் காணமுடியவில்லை. ஆனால் எலியா தன் சால்வையை முறுக்கி, யோர்தானின் தண்ணீரை அடித்த காரியமும், ஆற்றைக் கடந்துபோகுதலும் ஏதோஒன்றை உணர்த்துவது தெளிவாகிறது. அதன்பொருள் என்னவென்று நீங்கள் கேட்கலாம். அநேக தீர்க்கதரிசனங்கள் அவைகள் நிறைவேறினபிறகே புரிந்துகொள்ளமுடியும் என்று நாம் அறிகிறோம். ஆனாலும் அது என்னவாக இருக்கும் என்று யூகிக்க முற்படலாம். வேதாகமத்தின் உருவகமொழியில், தண்ணீர் சத்தியத்தை அடையாளப்படுத்துகிறது. அதோடுகூட ஜனங்களையும் குறிப்பதாயுள்ளது. வேதாகமத்தில் தண்ணீருக்கு இந்த இரண்டும் உருவகங்களாக கொடுக்கப்பட்டுள்ளது(வெளிப்படுத்தல்17:1,15, 22:1,2, எரேமியா 51:12,13, எசேக். 47:1-12, எபேசி. 5:26). அதோடுகூட, யோர்தான் என்றால் பரீட்சை அல்லது நியாயந்தீர்த்தல் என்று பொருள். யார் தற்பொழுது நிஜத்தில் (**antitype**) நியாயந்தீர்க்கப்படுகின்றனர்? என்ன நியாயத்தீர்ப்பு நடக்கிறது?

## எலியாவின் சால்வை எதை அடையாளப் படுத்தக்கூடும்?

இதற்குபதிலாக, பூமியின் ஜனங்கள் பொதுவாக உள்ள ஜனங்களை சத்தியத்தினால் நியாயந்தீர்க்கபடுவதைக் குறிப்பதாக நம்புகிறோம். ஜனங்கள் தண்ணீருக்கு அடையாளமாக இருக்கிறார்கள். ஜனங்கள் ஏதோ ஒரு வழிமுறையின்படி பரீட்சிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கபடுவதை கூறுவதுபோல் தோன்றுகிறது. மேலும் இவ்வாறு சத்தியத்தினிமித்தமாக ஜனங்களிடையே உணர்வில் பிரிவினை உண்டாகிறது. தண்ணீர் தண்ணீரின்று பிரிக்கப்படுவதுபோல், ஜனங்கள் ஜனங்களினின்று பிரிக்கப்படுகின்றனர். சத்தியம் சிலரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது, சிலரால் ஒதுக்கி தள்ளப்படுகிறது. எலியா தன் சால்வையை முறுக்கி தண்ணீரை அடித்ததால் பிரிவு உண்டானது. எலியாவின் சால்வை வெளிப்படையான அடையாளம் அல்லது அறிகுறி. தேவனுடைய வல்லமை அவனோடு இருந்து, அந்த தேவவல்லமை திருச்சபையை ஆசீர்வதித்துவருவதைக் குறிக்கிறது. தண்ணீரை சால்வைகொண்டு அடிக்கும்பொழுது, சால்வை எலியாவின் கரத்தில் இருந்தது. அவ்வாறே சத்தியத்துக்கான அதிகாரமும் வல்லமையும் பெற்ற திருச்சபை, தங்கள் கைகளில் கொடுக்கப்பட்ட தேவவல்லமையைப் பயன்படுத்தி, ஜனங்களை பிரிக்கின்றனர்(தண்ணீரை அடித்தல்).

இது இன்னும் நிறைவேறவில்லை என்று எண்ணுகிறீர்களா? என்று உங்கள் மனதில் கேள்வி எழலாம். இது முழுமையாக நிகழவில்லை என்றே நாம் எண்ணுகிறோம். தேவன் எவ்வழியில் சத்தியத்தின் அடிப்படையில் சில அதிசயமான வல்லமைகளை உபயோகித்து, பிரிவினைகளை உண்டாக்குவார் என்பதை நாம் தொடர்ந்து கவனித்துவருகிறோம். சத்திய பாடத்தின்பேரில் மிகவும் அதிகாரப்பூர்வமான பிரிவினைகளை எதிர்நோக்கியிருக்கிறோம்.

**R5846 : page 40**

இதில் ஏதாகிலும் ஒன்று மாபெரும் வெறுப்புக்குள் வழிநடத்தக்கூடும். நம் கர்த்தரின் ஊழியத்தில் அவர் கொடுத்த குறிப்பிடத்தக்க சில சத்தியங்கள் பரிசேயர் சதுசேயரிடையே அதிக வெறுப்பை ஏற்படுத்தினதை நாம் நினைவில் கொள்வோம். அந்த வெறுப்பு அவரை கைதுசெய்து சிலுவையிலறையும் வரை வழிநடத்திச்சென்றது. “நாங்கள் அவனை கொலைசெய்யவேண்டும்” என்று அவர்கள் கூறும்வரைக்கும் அந்த வெறுப்பு அங்கே காணப்பட்டது.

நாம் துன்பங்களைத் தூண்டிவிட தெருக்களில் சென்று போராடப் போகுமளவு முட்டாள்தனமாக ஒன்றும் செய்யப்போவதில்லை. தெளிந்த புத்தியும் பலமுமுள்ள ஆவியை பிரயோகித்து, பெருந்தன்மை, சாந்தம், பொறுமை, சகோதரசிநேகம், அன்பை நடைமுறைப்படுத்துவோம்.

“புறாவைப்போல் கபடற்றவர்களாயும், பாம்பைப்போல வினவுள்ளவர்களாயும்” இருப்போம்(கலாத்தியர் 5:22,23, மத்தேயு 10:16). இந்த எல்லா அறிவுரைகளையும் நாம் மறக்கக்கூடாது. நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருந்து, எது சரி என்று அறிந்து செய்யும்பொழுது, நம்மேல் உபத்திரவங்கள் வருமாகில், அவர் அதை அனுமதிக்கிறார் என்று ஏற்றுக்கொள்ளும் திறன் பெறுவோம். நாம் நம் குருவின் ஆவியை வெளிப்படுத்தாமல், பெருமையாகவும், நம்மை உயர்த்தியும் ஜனங்களிடையே பேசுவோமாகில், நாம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவில்லை என்றறிந்து, அதற்காக மனம் வருந்தவேண்டும்.

ஆகவே இக்காரியம் ஒரு சில மாதங்களிலோ அல்லது ஒரு சில வருடங்களிலோ நடக்கும். நிச்சயமாக நம்மால் கூறமுடியாது, அதை எதிர்நோக்கியிருப்போம். அக்கினி இரதத்தில் நாம் ஏறுமுன், ஜனங்களிடையே உணர்வுகளில் பிரிவினை உண்டாகுவதை நம்மால் காணமுடியும். அன்பு சகோதர சகோதரிகளே, தற்பொழுது இந்த சிந்தனைகளோடுகூட அனைவர்மேலும் தேவ ஆசீர்வரும்படியாக ஜெபித்து, நாம் உங்களிடமிருந்து விடைபெறுகிறோம்.

“என் கண்கள் கர்த்தர் இயேசுவின் பிரசன்னம் மகிமையில் காணுமே தன் காலின்கீழ் கோபத்தின் திராட்சை ஆலை மிதித்துப்போடுவார்

---

See more Books & Articles at www.foodfornewcreature.com